நிதி (சிஎம்பிசி.)த்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

**<u>கடித எண் : 8764 / சி.எம்.பி.சி. / 2012–1, நாள்: 18 –4–2012</u>**

அனுப்புதல்
**திரு. க. சண்முகம், இ.ஆ.ப.,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9.
இயக்குநர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை–6.
இயக்குநர், தொடக்கப்பள்ளிக் கல்வித்துறை, சென்னை–6.
மாநில கணக்குத் துறைத் தலைவர், கணக்குகள்(ம)உரிமைத் தொகை, சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர்(துணிக்கை–1 & 2), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை–9/மதுரை.
ஆணையர், கருவூலக் கணக்குத்துறை, சென்னை–15.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர் (வடக்கு/தெற்கு/கிழக்கு), சென்னை–1/35/5.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை – 625 001.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதங்கள்,2009 – இடைநிலை ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடத்தில் சாதாரண நிலையில் உள்ளவர்களுக்கு ரூ.500/- சிறப்புப்படிக்கு மாற்றாக ரூ.750/- தனி ஊதியம் 01-01-2011 முதல் அனுமதித்து ஆணையிடப்பட்டது – தனி ஊதிய நிர்ணயம் குறித்து தெளிவுரைகள் வழங்கக் கோரல் – தொடர்பாக.

பார்வை:
1. அ.ஆ.நிலை எண்.234, நிதி (ஊ.பி)த்துறை, நாள்.01–6–2009.
2. அ.ஆ.நிலை எண்.270, நிதி (ஊ.பி)த்துறை, நாள்.26–08–2010.
3. அ.ஆ.நிலை.எண்.23, நிதி (ஊ.பி)த்துறை, நாள்.12–01–2011.
4. அ.ஆ.நிலை.எண்.58, நிதி (சிஎம்பிசி)த்துறை, நாள்.25–01–2011.
5. அரசுக்கடித எண்.36135/சிஎம்பிசி/11–1, நிதித்துறை, நாள்.19–07–2011.
6. பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.

********

பார்வை இரண்டில் காணும் அரசாணையில் மற்றவற்றுக்கிடையே இடைநிலை ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01--08--2010 முதல் ரூ.500/- சிறப்புப்படி

..... /2/

அனுமதித்து ஆணையிடப்பட்டது. பின்னர் பார்வை மூன்று மற்றும் நான்கில் காணும் அரசாணைகளில் மேற்கூறிய ஆசிரியர் பணியிடங்களுக்கு **1—8—2010** முதல் அனுமதிக்கப்பட்ட சிறப்புப்படி ரூ.500/-க்கு பதிலாக, சாதாரண நிலையில் ரூ.5200 – 20200 + தர ஊதியம் ரூ.2800/- பெறும் இடைநிலை ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்களுக்கும் சாதாரண நிலையில் ரூ.9300 – 34800 + தர ஊதியம் ரூ.4800/- பெறும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.750/- தனி ஊதியம் வழங்கவும், இத்தனி ஊதியம் வரும் காலங்களில் ஆண்டு ஊதிய உயர்வுக்கும் அகவிலைப்படிக்கும், ஓய்வூதியத்திற்கும் கணக்கில் கொள்ளப்படும் எனவும் ஆணையிடப்பட்டது. மேலும், 1—1—2006-க்கு பின்னர் தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலையில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்/ இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு 1—8—2010 முதல் அனுமதிக்கப்பட்டு வரும் சிறப்புப் படியான ரூ.500/- தொடர்ந்து பெற அனுமதித்தும் ஆணையிடப்பட்டது.

2. பார்வை ஆறில் காணும் மனுக்களின் வாயிலாக பல்வேறு ஆசிரியர் சங்கங்கள், திருத்திய ஊதிய விகித அமைப்பில் 1—1--2006-க்கு பின்னர் தேர்வு நிலை, சிறப்பு நிலை பணியிடங்களுக்கு என தனி ஊதிய விகிதம் அனுமதிக்கப்படாமல் அடிப்படைச் சம்பளம் மற்றும் தர ஊதியம் சேர்ந்ததில் **3** சதவீதத்திற்கு சமமான ஒரு ஊதிய உயர்வு அளித்து அதே ஊதியத் தொகுப்பு + தர ஊதியத்தில் தொடர வேண்டும் என பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில் திருத்திய ஊதிய விகிதத் தொகுப்பில் 1—1—2006 முதல் ரூ.**2800** மற்றும் ரூ.**4800** தர ஊதியம் பெறும் அனைத்து இடைநிலை ஆசிரியர் / இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் பார்வை மூன்று மற்றும் நான்கில் காணும் அரசாணைகளில் **1—1—2011** முதல் அனுமதிக்கப்பட்ட தனி ஊதிம் ரூ.750/- பெறத் தகுதியுண்டா எனவும் தனி ஊதியம் மற்றும் சிறப்புபடி பெற்றுவரும் ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறும் நிகழ்வுகளில் அவர்களின் ஊதிய நிர்ணயம் குறித்து உரிய தெளிவுரை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. இதனை அரசு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு தெளிவுரை வெளியிடப்படுகிறது :--

அ) **1—1—2011** முதல் சாதாரண நிலையில் உள்ள இடைநிலை ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஆகியோருக்கு ரூ.**750**/- தனி ஊதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாசிரியர்களுக்கு அவர்கள் 1-1-2011-க்கு பின்னர் தேர்வு நிலை எய்தும்போது தர ஊதியத்தில் எவ்வித மாற்றமும் இல்லாமல் அவர்கள் பெற்றுவரும் அடிப்படை ஊதியத்தில் (தர ஊதியம் உட்பட) **3** சதவீதத்திற்கு சமமான ஒரு ஊதிய உயர்வு மட்டுமே அளிக்கப்படுவதால் அவர்கள் இத்தனி ஊதியத்தினை தொடர்ந்து பெறத் தகுதியுடையவர்களாகிறார்கள்.

ஆ) மேற்குறிப்பிட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களுக்கு அனுமதிக்கப்படும் தனி ஊதியம் ரூ.**750**/-, ஆண்டு ஊதிய உயர்வுக்கும், அகவிலைப்படிக்கும் ஓய்வூதியத்திற்கும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இவ்வகை ஆசிரியர் பணியிடங்களில் இருந்து பதவி உயர்வு பெறும் ஆசிரியர்களுக்கு உயர் பதவியில் ஊதியம் நிர்ணயம் செய்யும் போது இத்தனிஊதியம் அடிப்படை ஊதியத்துடன் சேர்த்து கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதன் பின்னர் உயர் பதவியில் இத்தனிஊதியம் தொடர்ந்து அனுமதிக்கப்படக் கூடாது.

..... /3/

இ) பார்வை இரண்டில் கண்டுள்ள அரசாணையில் இடைநிலை ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01--08--2010 முதல் அனுமதிக்கப்பட்ட சிறப்புப்படி ரூ.500/- 1—1—2006-க்கு முன்னர் தேர்வுநிலை / சிறப்பு நிலை எய்திய மேற்கூறிய ஆசிரியர் பணியிடங்களுக்கு மட்டுமே பொருந்தும். இவ்வகை ஆசிரியர்கள் பதவி உயர்வு பெற்ற பின்னர் உயர்பதவியில் சிறப்புப்படி ரூ.500/- தொடர்ந்து பெறத் தகுதியற்றவர்கள்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

**நகல் :**
பள்ளி (G-2)க் கல்வித்துறை, சென்னை–9.
நிதி (கல்வி– 2) த்துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.